# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC .No. 145/2022 – அ.சா. 1 (ராமையா த/பெ. சுப்பையா) குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி ஆஜர்.** நாள்: 18.06.2025.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவத்தை கேள்விப்பட்டு எனது மருமகளை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். சம்பவம் பற்றி எனக்கு ரவி என்பவர் தகவல் சொன்னார். நான் அளித்த புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகாரை நான் படித்து பார்த்தேன்.

2. புகாரை யார் எழுதியது என்றால் அங்கு இருந்த நபர் எழுதினார். அவர் யாரென்றே எனக்கு தெரியாது. போலீசார் சொன்னதன் அடிப்படையில் கையெழுத்து செய்து கொடுத்தேன். எனது உறவினர்களான ரவி, சுதாகர், தினகரன், வெற்றிச் செல்வம், கனகராஜ், முருகேசன், பழனியப்பன் ஆகியோர்களின் பெயர், முகவரி விவரங்களை என்னிடம் கேட்டு அவர்களிடமும் போலீசார் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. எனது மருமகள் சென்ற இரு சக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் லாரியின் பதிவெண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனது மருமகளுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. எனது மருமகள் சம்பவ தினத்தன்று தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எனது மருமகளின் விபத்து வழக்கு சம்பந்தமாக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகள் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மருமகளை ஆம்புலன்சில் ஏற்றி நான் இரு சக்கர வாகனத்தில் பின்னால் சென்றேன் என்றால் சரிதான். ஆம்புலன்சில் யார் யார் உடன் சென்றார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் பதட்டத்தில் நான் கவனிக்கவில்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– சி.பாரதி)

நீதித்துறை நடுவர் எண் –1 ,

புதுக்கோட்டை.